பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 27 ஞாயிற்றுக்கிழமை 11.06.2023 கதிர் 212

# காணி மீளளிப்பைக் கவனிக்க தனி அலுவலகம் உருவாக்கம்

## இராணுவ பிரிகேடியர் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இயங்கும்

வடக்கு, கிழக்கு அதியுயர் பாதுகாப்பு வலயங்களில்உள்ளபாரம்பரியகாணிகளை மக்களிடம் மீள ஒப்படைக்கும் பணிகளை முன்னெடுப்பதற்காக நிரந்தரமான அலுவலகமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் பணிப்புரைக்கு அமைய இந்தஅலுவலகம்ஜனாதிபதிஅலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இராணுவ பிரிகேடியர் தலைமையில் செயற்படவுள்ள இந்த அலுவலகமானது ஆறு மாத காலத்திற்குள் காணிப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலும் காணி உரிமையாளர்களுக்கு அநீதி இழைக்கப்படாத வகையிலும் இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் உரிய அலுவலகத்தை உருவாக்குமாறு பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு, சாகல ரத்நாயக்க

☞2

## இனி இது ரகசியம் அல்ல!

யாரை எப்படி நடத்தவேணும், எங்க வைக்கவேணும் என்ற விவரம் கொழும்புக்கு நல்லாத் தெரியும். குறிப்பாச் சொன்னா அமெரிக்காவை எங்க வைக்கவேணும், இந்தியாவை எங்க வைக்கவேணும் சீனாவை எங்க வைக்கவேணும் என்றதெல்லாம் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அத்துப்படி யாரைத் தடவுக் கொடுக்க வேணும் யாரைத் தட்டி வைக்கவேணும் என்கிற விடயத்திலயும் அவர்கள் நிபுணர்கள். வடக்கு - கிழக்கில சீனாவுக்குத் தாராளமாக இடம் கொடுப்பார்கள், ஆனால் இந்தியா எதிர்த்தால் அதை அப்படியே நிறுத்தி விடுவார்கள். அதற்கு நல்ல உதாரணம் யாழ்ப்பாணத்தின் தீவகங்களில் சூரிய மின்கலங்களைப் பொருத்துவதற்கான திட்டங்கள் சீனாவிற்கு வழங்கப்பட்டு இந்திய எதிர்ப்பால் பின்னர் அது நிறுத்தப்பட்டது. கொழும்புத் துறைமுகத்தில் ஒரு பக்கத்தைச் சீனாவுக்குக் கொடுத்தல், மற்றப் பக்கத்தை இந்தியாவுக்குக் கொடுப்பார்கள். வடக்கு கிழக்கில் இந்தியா முதலீடுகளுக்கு அதிகளவில் இடம்கொடுத்தால் தெற்கில் சீன முதலீடுகளுக்கு அதிக இடம் வழங்கப்படும். இதற்கு நடுவில் அமெரிக்காவுக்கும் அதன் ஆசைக்கு ஏற்ப கொஞ்சம் கொஞ்சம் இடம் வழங்கப்படும். இப்படிப் பிராந்திய மற்றும் உலக வல்லரசுகளை எப்படிக் கையாள்வது என்பதில் கைதேர்ந்தவர்கள் சிங்கள அரசியல்வாதிகள்.

அதன் மற்றொரு உதாரணம் இந்த வாரத் தொடக்கத்திலும் இடம்பெற்றது. ஆளும் தரப்பு உறுப்பினர்களுடனான ஜனாதிபதியின் சந்திப்பு

☞2

# உணவுப் பாதுகாப்பின்மையால் வாடுகின்றனர் 75 லட்சம் மக்கள்

இலங்கையில் 75இலட்சம் மக்கள் கடுமையானஉணவுப்பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர் என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம்மற்றும்புள்ளியியல்துறை பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கையானது மொத்தச் சனத்தொகையில் உள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் 33 சதவீதம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் தற்போதைய உணவுப் பாதுகாப்பின்மை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உணவுப் பாதுகாப்பற்ற 23 நாடுகளில் இலங்கை20ஆவதுஇடத்தில்உள்ளமை ஆய்வில்தெரியவந்துள்ளது.நாட்டிலுள்ள 57இலட்சம் குடும்பங்களில் 37இலட்சம் குடும்பங்கள் அரசாங்கத்திடம் ஏதாவது ஒரு உதவியை கோரியுள்ளனர்.

மொத்தக் குடும்பங்களில் 65சதவீதமானகுடும்பங்கள்வாழ்க்கைச்செலவை ஈடுசெய்வதில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றன. இதில், கிராமங்கள், நகரங்கள் என்ற வேறுபாடற்ற நிலைமைகளே காணப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கோரத் தாண்டவமாடும் 'டெங்கு' மக்களுக்கு அபாய எச்சரிக்கை




இலங்கையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது என்று பேராசிரியர் நிலீகா மலவிகே தெரிவித்துள்ளார். ருவிட்டர் பதிவொன்றின் ஊடாக அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் 9ஆம் திகதி வரை நாட்டில் 2 ஆயிரத்து 52 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்தனர்.

எனினும், இந்த வருடத்தின் நேற்று வரையான காலப்பகுதியில் பதிவாகிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 42 ஆயிரத்து 184 ஆகும் என்று அவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 10 வருட காலப்பகுதியில், பதிவாகும் டெங்கு நோயாளர்களின்எண்ணிக்கைஅதிகரித்துள்ளது என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

நாட்டில், தற்போது வரையில் அதிக அவதானம் மிக்க 61 சுகாதார பரிசோதகர்கள் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (02)

## தந்தையும் மகனும் யானை தாக்கி பரிதாபச் சாவு!

காட்டில் விறகு வெட்டிக் கொண்டிருந்த தந்தையும், மகனும் யானை தாக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மொனராகலை மாவட்டம், பிபிலை பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இருவரினதும் சடலங்கள் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

49 வயதுடைய தந்தையும், 20 வயதுடைய மகனும் யானையின் தாக்குதலுக்கு இலக்காகிப் பலியாகியுள்ளனர்.

சடலங்களை வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# கடன் மறுசீரமைப்பு விடயத்தில் அடுத்த வாரத்தில் முன்னேற்றம்



எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ள, உலக இறையாண்மைக் கடன்வட்டமேசைகூட்டத் தொடரின்போது அதிக கடனில் சிக்கியுள்ள நாடுகளுக்கான, விரைவான கடன் மறுசீரமைப்பு விடயங்களில், முன்னேற்றத்தைஅடைய முடியுமென எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இந்தவிடயம்சம்பந்தமாக சர்வதேச ஊடகமொன்றுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர், ஜூலி கோசாக் தெரிவித்துள்ளதாவது,

20 முக்கிய பொருளாதார நாடுகள் குழுவின், தொழில்நுட்ப குழு சந்திப்பு நேற்று ஆரம்பமாகியுள்ளது. இதற்கு மேலதிகமாக, அந்தக் குழுவுக்கு தற்போது தலைமை வகிக்கும் இந்தியாவினால், பிரான்ஸ் தலைநகர் பரிஸில், எதிர்வரும் 15ஆம் திகதி அமர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.

அந்தக் கூட்டத்தொடரில் அதிகாரப்பூர்வமாக கடன் வழங்குநர்களான, பாரிஸ் கிளப், சர்வதேச நிதி நிறுவனங்களான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்டவுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தப் பேச்சின்போது சில சர்வதேச நாடுகளுக்கான பெரும் கடன் வழங்குநரான சீனாவும் பங்கேற்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், ஜூன் 30 வட்டமேசை பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். அதன்போதுஇறுதிமுடிவினை எட்டுவதற்குநடவடிக்கைகள் எடுக்கப்படலாம் - என்றார்.

இலங்கைக்கான கடன்மறுசீரமைப்புதொடர்பில் இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் ஒன்றிணைந்து பொதுத்தளமொன்றை ஆரம்பித்துள்ளபோதும் தற்போது வரையில் சீனா அதில் இணையாளராக செயற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### பகிடிவதை குற்றச்சாட்டின் கீழ்

# பேராதனைப் பல்கலையின் 11 மாணவர்கள் இடைநீக்கம்

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் 11 பேர் பகிடிவதை சம்பவம் தொடர்பில் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முகாமைத்துவ பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் குழு புதிய மாணவர்களைப் பகிடிவதை செய்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகத்தின் கூற்றுப்படி, இரண்டாம் ஆண்டு மாணவர்கள் புதிய மாணவர்களைப் பல்கலைக்கழக விடுதியில் ஐந்து நாட்கள் தங்கவைத்து, நுகர்வுக்குத் தகுதியற்ற உணவை அவர்களுக்கு வழங்கியுள்ளதுடன், மேலும் அவர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(02)

Techna
Technical Institute
Smart thinking leads to innovate

TECHNA Technical Institute
A/L தொழினுட்பப்பிரிவு

077 170 35 49 வீரசிங்கம் மண்டபம், 3ம் மாடி யாழ்ப்பாணம்.

புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2025
11.06.2023
(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணிக்கு

மாணவர்கள் ஏன் Techna தெரிவு செய்கிறார்கள்
» மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு
» தொடர்ச்சியாக வகுப்புகள் நடைபெறும் மாதந்த பரீட்சை அலகு
» பரீட்சை தவணை பரீட்சைகள் புள்ளிகளுக்கேறப Z-Score மூலமான தரப்படுத்தல்
» ஒவ்வொரு பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்
» அனுபவமிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்
» செய்முறை பயிற்சி வகுப்புகள்
» களப்பயணங்களை மேற்கொள்ளல்
» இறுதி பரீட்சைக்கான வினைத்திறனான தயார்படுத்தல்

எமது ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| உயிர்முறைமைகள் தொழினுடபவியல் | M. விஸ்னுதேவன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | S. மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | S. சக்தி |
| ICT | T. லவன் |
| விவசாய விஞ்ஞானம் | S. சஜீபன் |
| கணிதம் | T. சசிகரன் |
| புவியியல் | S.P. கரன் |

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. ஜனாதிபதி ஜப்பான் சென்றது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சில வாரங்களின் பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்பதால் மொட்டுக்கட்சியின் அமைச்சர்கள் பலரும்கூட வழக்கத்துக்கு மாறாகக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர்.

வருவிருந்த வார நாடாளுமன்றக் கூட்டம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்ட பின்னர், பேச்சு பல விடயங்களையும் நோக்கித் திரும்பியது. அமைச்சர்கள் சிலர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டபோது வாதப் பிரதிவாதங்கள் கடும் சூடுபிடித்தன. அதில் சில சுவையான சம்பவங்களும் இருக்கின்றன என்றாலும் இப்போது சொல்ல வந்த விடயம் அதுவல்ல என்பதால், இன்று அவற்றைத் தவிர்த்து விடுகின்றேன். பிறிதொரு தருணத்தில் அதைப்பற்றிச் சொல்கின்றேன்.

கூட்டத்தின் ஒருகட்டத்தில் இராஜாங்க அமைச்சர் டயான கமகே, தாய்வான் நாட்டு முதலீட்டாளர்கள் சிலர் இலங்கையில் முதலீடு செய்வதில் ஆர்வமாக இருக்கின்றார்கள் என்றும் அவர்களை இங்கு அழைத்து வருவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைத் தான் மேற்கொண்டிருந்தார் என்றும் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். ஆனால், அவர்களுக்கு விஸா வழங்குவதற்கு அதிகாரிகள் இழுத்தடித்து வருகின்றார்கள் என்றும் முறையிட்டார்.

அம்மையார் இந்த விவகாரத்தை எடுத்ததும் ஜனாதிபதி அதன் மீது அதிக அக்கறை காட்டவில்லை. முதலீடு தேவை, டொலர் வரவேண்டும் என்று மீண்டும்மீண்டும் கூறிவரும் ஜனாதிபதி, டயானா கமகே டொலரில் முதலீட்டைக் கொண்டவருவதற்குத் தான் தயார் என்று தெரிவித்தபோது, அதில் எந்த ஆர்வமும் காட்டவில்லை. டயானாவின் முறைப்பாட்டுக்கு, "அதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. நாம் அது பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை'' என்று கூறி அந்தப் பிரச்சினையை புறக்கணிக்கப்பார்த்தார். ஆனால் டயானாவோ விடுவதாக இல்லை. மீண்டும் அந்தப் பேச்சையே தொடர்ந்தார். இதனால் ஜனாதிபதி கடும் கோபமடைந்தார்.

"அதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்கிறேன் நான்" என்று எரிஞ்சு விழுந்தார். பெருமளவில் தாய்வான் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருவதைச் சீனா விரும்பவில்லை. தாய்வானை ஒரு நாடாகச் சீனா இன்னும் அங்கீகரிக்கவில்லை. அதனால் இரு தரப்புகளுக்கும் இடையில் அது தொடர்பான இழுபறிகள், மோதல்கள் தொடர்கின்றன. தாய்வான் முதலீட்டாளர்களை இங்கு அழைத்து வருவதன் மூலம் இந்த பன்னாட்டுப் பிரச்சினையை இங்கும் இழுத்துவிடவா பார்க்கிறீர்கள் என்று டயானாவைப் பார்த்து எகிறினார் ரணில். அத்தோடு டயானா வாயை இறுக்க மூடிக்கொண்டார்.

தாய்வான் விடயத்தில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலும் இராஜதந்திரப் போர் தீவிரமாக நடக்கின்றது. அமெரிக்கா தாய்வான் பக்கம் நிற்கின்றது. சீனா தனது முஷ்டியை தாய்வானை நோக்கி உயர்த்தினால், தாய்வானுக்கு ஆதரவாக நானும் வருவேன் என்று அமெரிக்காதான் பதிலுக்கு முஷ்டியை முறுக்கும். அந்தளவுக்கு இரு தரப்புக்களுக்கும் இடையில் இரராஜதந்திரப் பகை நிலவுகின்றது. அப்படியிருந்தும் சீனாவின் மனங்கோணாமல் நடந்து கொண்டு அதனிடம் நல்ல பெயர் எடுப்பதில் கொழும்பு எவ்வளவு கவனமாக இருக்கிறது பார்த்தீர்களா?

-இடிமின்னல்

## காணி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணிப்புரை விடுத்துள்ளார்.

2009ஆம்ஆண்டளவில், பாதுகாப்புப் படையினரிடம் 23,850.72 ஏக்கர் மக்களின் காணிகள் இருந்ததாகவும், அதில் 20775.52 ஏக்கர் காணிகள் தொடக்கத்தில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த பெப்ரவரியில்; 106 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளதோடு 2989.80 ஏக்கர் காணிகளை மக்களிடத்தில் ஒப்படைப்பதற்காக இனங்காணப்பட்டுள் ளதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கியதன் பின்னர் இந்தக் காணிகளும் விடுவிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய பாதுகாப்புக்கும் பொதுமக்களுக்கும் எவ்வித பிரச்சினையும் ஏற்படாத வகையில் பாரம்பரியக் காணிகளை மக்களுக்கு விடுவிப்பதற்கான முறையான பொறிமுறையைத் தயாரிக்கும் நோக்கில் இந்த அலுவலகம் செயற்படவுள்ளது.

# வலஸ்முல்லவின் வாகன விபத்து வயோதிப தம்பதிகள் உயிரிழப்பு!

அம்பாந்தோட்டை - வலஸ்முல்லை பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபத் தம்பதியர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோவுடன் லொறி மோதியதில் ஏற்பட்ட விபத்திலேயே குறித்த தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத் துச் சம்பவம் அம்பாந்தோட்டை - வலஸ்முல்லை பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மேற்படி பிரதேசத்தைச்சேர்ந்தவயோதிபத் தம்பதியினர்ஓட்டோவில் வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை விபத்தில் சிக்கியுள்ளனர். விபத்தில் 77 வயதுடைய கணவன் சம்பவ இடத்திலும், 75 வயதுடைய மனைவி வைத்தியசாலையிலும் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் பயணித்த ஓட்டோவின் சாரதியான 26 வயதுடைய இளைஞர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஓட்டோவுடன் மோதிய லொறியின் சாரதியான 35 வயதுடைய குடும்பஸ்தர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் கூட்டம் விரைவில் மீண்டும்

இலங்கைத் தமிழர சுக்கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் மீண்டும் ஜுன் 19 கொழும்பில் உள்ள இரா. சம்பந்தனின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும், தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா, செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம் உள்ளிட்டவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தின்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்தப்பட்ட இறுதிப் பேச்சுவார்த்தை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கான தீர்மானம், கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர், ஜனாதிபதி அலுவலகத்தன் கீழ்ப்பகுதியில் உள்ள மண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் கூடிக்கதைத்தபோதே எடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த செவ்வாய்க்கிழமையும் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூடியிருந்தபோதும், அதில் எவ்விதமானதொரு முக்கிய விடயங்களும் பேசப்படாது நிறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் கடும் அழுத்தத்தால் முதலில் மாகாண சபைத் தேர்தல்

## தயாராகுமாறு 'மொட்டு'வின் சகாக்களுக்குப் பஸில் பணிப்பு



இந்தியாவின் கடும் அழுத்தம் காரணமாக முதலில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம் என்று ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார் என சிங்கள இணைய ஊடகமொன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

சிரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் மாகாணசபைஉறுப்பினர்களுடன்மொட்டுக்கட்சிதலைமையகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பஸில் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகின்றது. .

இந்தியாவின் அழுத்தத்தால் மாகாண சபைத் தேர்தலை முதலில் நடத்த வாய்ப்புள்ளதால், அதனை எதிர்கொள்வதற்குத் தயாராகுமாறு கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்களுக்கு பஸில் ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் 10 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கவுள்ளார் எனவும், இதன்போது மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக தீர்மானம் எடுக்கப்படலாம் எனவும் பஸில் ராஜபக்ச தகவல் வெளியிட்டுள்ளார். (02)

# கடலில் மூழ்கிய மூவரை உயிருடன் மீட்ட எஸ்.ரி.எப்.

அறுகம்பே கடற்கரையில் நீராடச் சென்ற மூவர் காணாமல்போன நிலையில் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

மஹியங்கனைபிரதேசத்தைச்சேர்ந்தமூவரை இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

40 வயதுடைய பெண் ஒருவரும், 11 வயதுடைய சிறுவனும், 17வயதுடைய இளைஞரும் கடலில் மூழ்கி நேற்றுக் காணாமல்போன நிலையில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

**நேற்று (10/06/2023) சனிக்கிழமை திருமணத்திற்கானபுடைவையுடன்கூடிய சாறிபை (சரவணா சில்க்ஸ்) ஒன்று யாழ்ப்பாணம் ஸ்ரீவீய பேருந்து நிலையத்திற்கும் பிரம்படி வீதிக்கும் இடையே தவறவிடப்பட்டுள்ளது. இதனை கண்டு எடுத்தவர்கள் கீழ் கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.**
**(77) 035 0255**









# தமிழருக்குத் தீர்வு வழங்காமல் நாட்டை முன்னேற்ற முடியாது



## சம்பந்தன் உள்ளிட்ட தலைவர்களை இனியும் ஏமாற்ற முடியாது என்று சந்திரிகா சுட்டிக்காட்டு

இலங்கையில் பல்லாண்டு காலமாகத் தமிழ் மக்கள் பல்வேறு விதமான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். அவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு வழங்காமல் இந்த நாட்டை முன்னேற்ற முடியாது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துக் கட்சிகளுடனும் பேசி புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வைக் காண முனைந்தால் அதற்கு நான் முழுமையான ஆதரவு வழங்குவேன்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு தீர்வுக்கான பேச்சை ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்தால் அந்தப் பேச்சு தோல்வியில்தான் முடிவடையும்.

தீர்வு என்ற பெயரில் தமிழ்க் கட்சிகளை இனிமேல் ஏமாற்ற முடியாது. சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தலைவர்கள் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக உள்ளார்கள். - என்றார். (02)

## முன்னாள் காதலியைக் கழுத்தறுத்து படுகொலை செய்த காதலன் கைது

வீட்டில் தாயாருடன் வசித்து வந்த இளம் யுவதி கத்தியால் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் மொனராகலை மாவட்டம், செவனகலை பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை பட்டப்பகலில் இடம்பெற்றுள்ளது.

எஸ்.லக்சிகா என்ற 22 வயது யுவதியை இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த யுவதியின் 22 வயதுடைய முன்னாள் காதலன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்திலிருந்து வெள்ளிக்கிழமை மாலை பஸ்ஸில் தப்பிச் செல்ல முயற்சித்த வேளை பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

கொலை செய்யப்பட்ட யுவதியும், கைதான இளைஞரும் பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த போது காதலிக்க ஆரம்பித்தார்கள் எனவும், கடந்த வருடம் இளைஞருடனான காதலை யுவதி நிறுத்திக்கொண்டார் எனவும், அதற்குப் பழிவாங்கும் வகையிலேயே யுவதியை இளைஞர் கழுத்தறுத்துப் படுகொலை செய்தார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

நேற்று மதியம் யுவதியின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த இளைஞர், யுவதியின் தாயாரின் கண் முன்னால் இந்தக் கொலை வெறியாட்டத்தைப் புரிந்துள்ளார் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த யுவதியின் தந்தை கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் குழு மோதல் ஒன்றில் அடித்துப் படுகொலை செய்யப்பட்டார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.(02)

## எந்தவொரு தேர்தலுக்கும் மொட்டுக் கட்சி தயாராம்!

### மீண்டும் கூறினார் மஹிந்த



எந்தவொரு தேர்தலுக்கும் தமது கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராக இருக்கின்றது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது இலத்திரனியல் ஊடக ஒழுங்குமுறை நிறுவனங்கள் மற்றும் ஒலிபரப்பு அதிகார சபை சட்டமூலம் தொடர்பிலும் மஹிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டார்.

நாங்கள் இன்னும் அந்தச் சட்டமூலத்தைப் பார்க்கவில்லை. தற்போது ஊடகம் சுதந்திரம் உள்ளது தானே என்றும் அவர் கூறினார். (02)






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆரோக்கியமற்ற சட்டம்

ஒளி மற்றும் ஒலி பரப்பு ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை சட்டமூலம் நாட்டில் பலத்த விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ளது. இந்த ஆட்சியாளர்களால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட–மூலத்தைத் தொடர்ந்து கடும் கண்டனங்களையும் எதிர்ப்புக்களையும் சந்திக்கும் சட்டமூலமாக ஊடகங்கள் தொடர்பான இந்தச் சட்டமூலமே இருக்கின்றது.

இந்தச் சட்டமூலம் நடைமுறைக்கு வந்தால், அதன் பின்னர் ஒளி, ஒலி பரப்பு தொடர்பான ஊடகங்கள் அனைத்தினது கட்டுப்பாடுகளும் இந்த அதிகார சபையின் கீழ் கொண்டுவரப்பட்டுவிடும். 1966 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வானொலிச் சட்டம், 1987 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ரூபவாஹினி சட்டம் ஆகிய ஒலி மற்றும் ஒளிபரப்பு சட்டங்கள் எல்லாம் வலுவிழந்துவிடும்.

அதிகார சபை உருவாக்கப்பட்டதும் ஒருவருட காலத்துக்கு மாத்திரமே ஊடகங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். அந்த அனுமதிப் பத்திரத்தை 9 மாத காலத்துக்கு பின்னர் புதுப்பிக்க வேண்டும். ஊடகங்களுக்கு அனுமதி பத்திரம் வழங்குவதை ஊடகத்துறை அமைச்சின் செயலாளர், தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஜனாதிபதியால் பெயர் குறிப்பிடப்படும் மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் உருவாக்கப்படும் அதிகார சபையே தீர்மானிக்கும்.

இந்த அதிகார சபையின் கூட்ட நடப்பெண் இரண்டாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே ஜனாதிபதியின் பிரதிநிதிகள் இந்த அதிகார சபையில் அதிகாரமிக்கவர்களாக செயற்படுவார்கள். ஊடக நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் அதிகார சபை இறுதி தீர்மானம் எடுக்கும்.

அதிகார சபையின் அனுமதி இல்லாமல் எந்த ஊடக நிறுவனத்துக்கும் செயற்பட முடியாது. ஒருவேளை அனுமதி பத்திரம் மறுக்கப்படும்போது குறித்த ஊடக நிறுவனத்தின் சேவை முடக்கப்படவேண்டும். அனுமதி பத்திரம் இல்லாமல் செயற்படுவது கடும் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும்.

இவ்வாறெல்லாம் அந்தச் சட்டமூலம் தெரிவிக்கின்றது. இத்தகைய நிலை ஏற்பட்டால் அது சுதந்திர ஊடகங் களுக்கான வாய்ப்பை முழுமையாகப் பாதிக்கும். எந்தவொரு ஊடகமும் ஆட்சியாளர்களின் தயவு இன்றி ஊடகங்கள் இயங்கமுடியாது என்கிற பாரதூரமான நிலை ஏற்படும் என்கிற அச்சம் பரவலாக இருக்கின்றது.

அதிகார சபை என்பது அரசிலிருந்து விலகிய ஒரு கட்டமைப்பு என்கிறபோதும், இன்றைய ஆட்சியாளர்கள் ஏற்கனவே உள்ள சுயாதீன ஆணைக் குழுக்களைக் கையாண்ட விதம், அதிகார சபையின் எதிர்காலம் பற்றிய அச்சத்தை ஏற்படுத்துகின்றது. அப்படியொரு நிலையில் ஊடகங்கள் ஆட்சியாளர்களால் பழிவாங்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

அனுமதி பத்திரம் பெற வேண்டும் என்றால் சகல ஊடகங்களும் ஆட்சியாளர்களுக்குச் சார்பாக செயற்படவேண்டிவரும். ஆட்சியாளர்களுக்கு எதிராக எவரும் செயற்பட கூடாது என்பதையே இந்தச் சட்டமூலம் மறைமுகமாகக் குறிப்பிடுவதைப் போன்று உள்ளது.

சமூக மட்டத்தில் இதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதோடு அதனை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கும் உட்படுத்தப்படவுள்ளது. இது போன்ற சட்டங்கள் நாட் டின் ஜனநாயகத்தைச் சீர்குலைத்துவிடும் அதற்கு இடமளிக்கக்கூடாது. எனவே ஆட்சியாளர்கள் இந்தச் சட்டமூலத்தை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும்.

# 5 வருடங்களில் மட்டும் நாட்டுக்குள் 26 லட்சம் வாகனங்கள் இறக்குமதி

### நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

2015 - 2020 இற்கு இடைப்பட்ட காலங்களில் நாட்டுக்கு 24 லட்சத்து 98 ஆயிரத்து 714 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் நாட்டில் 5 பேருக்கு ஒருவர் வாகனம் கொள்வனவு செய்துள்ளனர் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை நாட்டுக்கு வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என பிரேம்நாத் சீ தொலவத்த எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் -

2015 ஆம் ஆண்டு ஆறு லட்சத்து 52 ஆயிரத்து 446, 2016 ஆம் ஆண்டு 4 லட்சத்து 66 ஆயிரத்து 986, 2017 ஆம் ஆண்டு 4 லட்சத்து 48 ஆயிரத்து 320, 2018 ஆம் ஆண்டு 4 லட்சத்து 96 ஆயிரத்து 282, 2019 ஆம் ஆண்டு மூன்று லட்சத்து 32 ஆயிரத்து 452, 2020 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 2228 வாகனங்னங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, இந்த குறிப்பிட்ட காலத்திற்குள் 24 இலட்சத்து 98 ஆயிரத்து 714 வாகனங்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் 2015 ஆம் ஆண்டு 295.37 பில்லியனுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதற்காக 250.06 பில்லியன் வரி வருமானம் பெறப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு 192. 32 பில்லியனுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதற்கான வரியாக 181.03 பில்லியன் அறவிடப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டு 204.17 பில்லியனுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதற்கு வரியாக 186.15 பில்லியன் அறவிடப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு 338. 98 பில்லியனுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் வரியாக 198.34 பில்லியன் அறவிடப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு 211.77 பில்லியனுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அவற்றிற்கு வரியாக 128.57 பில்லியன் அறவிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு 88. பில்லியனுக்கு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதற்காக 46 பில்லியன் வரியாக அறவிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க இந்த காலகட்டத்தில் 1332.51 பில்லியனுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அதற்கு வரியாக 991.12 பில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளது.

அந்த வாகனங்கள் இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட 62 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. சுமார் 100 நிறுவனங்கள் இந்த வாகனங்களை இறக்குமதி செய்துள்ளன.

எமது நாட்டில் இரண்டு கோடியே 20 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 18 வயதுக்குக் குறைவானோர் நூற்றுக்கு 13 வீதமானோர். 70 வயதுக்கு மேற்பட்டோர் நூற்றுக்கு ஐந்து வீதமானோர். அந்த வகையில் நாட்டு மக்களில் நூற்றுக்கு 56 வீதமானோர் ஒரு கோடி 36 லட்சம் மக்களால் தான் இந்த ஐந்து வருடங்களில் இந்தளவு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் ஐந்து பேருக்கு ஒருவர் இந்த காலப்பகுதியில் வெளிநாடுகளிலிருந்து வாகனம் கொள்வனவு செய்துள்ளார். இவற்றில் 75 அல்லது 80 வீதமானவை வங்கிக் கடன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. - என்றார். (05)

# பாலியல் கல்வி பாடத்திட்டத்தில் உள்வாங்கப்படுதல் வேண்டுமாம்

### டயனா கமகே கோரிக்கை

பாலியல் மற்றும் பாலியல் நோய் தொடர்பில் போதிய தெளிவு இல்லாத காரணத்தால் பெரும்பாலான சிறுவர்கள், இளைஞர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். பாலியல் நோய் என்றால் என்ன? என்பது கூட பெரும்பாலான தரப்பினருக்குத் தெரியாது. ஆகவே நாட்டின் கல்வி முறைமையில் பாலியல் மற்றும் பாலியல் நோய் தொடர்பான கற்கை பாடத்திட்டத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் டயனாகமகே சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பிள்ளைகளின் ஆரோக்கியம் மற்றும் கல்வி முறைமை தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதாரப் பாதிப்பு மற்றும் ஏனைய காரணிகளால் பிள்ளைகளின் மந்தபோசனை வீதம் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆகவே இது நாட்டின் எதிர்காலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும். பிள்ளைகளின் சுகாதாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும்.

மாணவர் பருவத்தில் உள்ள சிறுவர்களில் 11 சதவீதமானோர் குடும்ப வறுமை காரணமாக பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகியுள்ளார்கள். ஆகவே, மாணவர்களின் கல்வியைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாக ஏழ்மை காணப்படுகிறது. ஆகவே இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்களின் சுகாதாரத்துடன் ,பாலியல் கல்வி முறைமை தொடர்பில் நடப்பு நிலைவரத்துக்கு ஏற்ப புதிய கொள்கைகள் வகுக்க வேண்டும். பாலியல் தொடர்பில் போதிய விளக்கம் மற்றும் தெளிவு இல்லாத காரணத்தால் பிள்ளைகள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். கடந்த காலங்களில் இவ்வாறான பல சம்பவங்கள் நாட்டில் பதிவாகியுள்ளன.

2019 ஆம் ஆண்டு நாட்டில் எய்ட்ஸ் நோய் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. 19 முதல் 25 வயதுக்குட்பட்டவர்கள் தான் அதிகளவில் பாலியல் நோய் தொற்றுக்குள்ளாகியுள்ளாகியுள்ளார்கள். நாட்டில் பெரும்பாலானோருக்கு பாலியல் நோய் தொடர்பில் எவ்வித தெளிவும் கிடையாது. ஆகவே பாலியல் மற்றும் பாலியல் நோய் தொடர்பான விடயங்கள் கல்வி பாடத்திட்டத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

நாட்டின் கல்வி முறைமையில் கட்டாயம் பாலியல் தொடர்பான தெளிவுபடுத்தல் விடயங்கள் உள்வாங்கப்பட வேண்டும். பாலியல் நோய் தொடர்பில் பெரும்பாலான பிள்ளைகளுக்கு எவ்வித தெளிவும் கிடையாது. இதன் பாரதூரதன்மை அவர்களுக்கு தெரியாது. ஆகவே இதனை மாணவர்களுக்கு நிச்சயம் கற்பிக்க வேண்டும். - என்றார். (05)

# ஓட்டோ - லொறி மோதல் வயோதிபத் தம்பதி சாவு

வாகன விபத்தில் வயோதிபத் தம்பதியினர் பரிதாபகரமாகச் சாவடைந்துள்ளனர்.

ஓட்டோவுடன் லொறி மோதியதில் ஏற்பட்ட விபத்திலேயே குறித்த தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் அம்பாந்தோட்டை, வலஸ்முல்லை பிரதேசத்தில் வெள்ளியிரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபத் தம்பதியினர் ஓட்டோவில் வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை விபத்தில் சிக்கியுள்ளனர்.

விபத்தில் 77 வயதுடைய கணவன் சம்பவ இடத்திலும், 75 வயதுடைய மனைவி வைத்தியசாலையிலும் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் பயணித்த ஓட்டோவின் சாரதியான 26 வயதுடைய இளைஞர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஓட்டோவுடன் மோதிய லொறியின் சாரதியான 35 வயதுடைய குடும்பஸ்தர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (02)

# திருகோணமலை பொதுவைத்தியசாலைக்கு மருந்துவப் பொருள்கள் கையளிக்கப்பட்டன

வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மருந்து சார் பொருள்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) கையளிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் வேண்டுகோளுக்கிணங்க, கண் சத்திர சிகிச்சை நோயாளர்களின் நலன் கருதி கண் வில்லைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.ரீ.எம். பாரிஸ், திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் எல்.டபிள்யூ. ஜயவிக்ரமரத்ணவுக்கு வழங்கினார்.

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள வைத்தியர் வானி பிரேம்ஜிட் குடும்பத்தார் மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள ஈஸ்வரி ஜெகநாதன் குடும்பத்தினரின் நிதி உதவியால் வன்னி ஹோப் இலங்கை அலுவலகத்தின் ஏற்பாட்டில் இந்த மருந்து சார் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கண் சத்திர சிகிச்சை பிரிவு வைத்திய நிபுணர் மற்றும் வன்னி ஹோப் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

# பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா? கேள்விக்கு தடுமாறிய மொறகொட

விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா என்ற கேள்விக்கு என்ன பதில் சொல்ல முடியும் என்று எனக்கு தெரியவில்லை என இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட இதனை தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றிற்கான நீண்ட பேட்டியொன்றின் போது கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அனுபவம் மிக்க அரசியல்வாதியொருவர் சமீபத்தில் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் எனத் தெரிவித்தார் என்ற கேள்விக்கு என்னால் இதற்கு என்ன பதில் சொல்ல முடியும் என தெரியவில்லை என மிலிந்த மொராகொட தெரிவித்துள்ளார். (05)

# நீதியரசர் நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கையில் நீதி, பொறுப்புகூறல் விடயங்களும் உள்ளடக்கம்

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உருவாக்கம் மற்றும் இயக்கம் என்பன தொடர்பில் தமது இறுதி அறிக்கையில் விரிவான பரிந்துரைகளை முன்வைக்கவுள்ள நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு, நீதி மற்றும் பொறுப்புகூறல் சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் பரிந்துரைக்கவுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பாக ஆராய்தல், புலனாய்வுசெய்தல், அறிக்கையிடல் மற்றும் அவசியமான முன்மொழிவுகளைச் செய்தல் ஆகியவற்றுக்காக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையில் ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாந்து, ஓய்வுபெற்ற மாவட்டசெயலாளர் நிமல் அபேசிறி மற்றும் யாழ் நகர முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரடங்கிய ஆணைக்குழு கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது.

அந்த ஜனாதிபதி ஆணைக்குழுக்கு வழங்கப்பட்டிருந்த ஆணை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் முடிவுக்குவந்த நிலையில், அதன் இறுதி அறிக்கை டிசெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் அந்த ஆணைக்குழுவுக்கான ஆணை இவ்வாண்டு ஜனவரி 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டு, பின்னர் ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து கடந்த மே மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது ஜனாதிபதியால் அந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த ஆணை எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை முழுமையாகத் தயார்செய்யப்பட்டிருப்பதாக அறியமுடிவதுடன் அது இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவிருந்த போதிலும், தவிர்க்கமுடியாத சில காரணங்களின் விளைவாக அந்த அறிக்கை ஜூலை மாத முதல்வாரத்தில் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, தமது பூர்வாங்க அறிக்கையின் பிரகாரம் உருவாக்கப்படக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பல்லினத்தவரையும், பல்துறைசார் நிபுணர்களையும், பாதிக்கப்பட்ட தரப்பினரையும் உள்ளடக்கிய நம்பத்தகுந்த பொறிமுறையாக அமைய வேண்டியது அவசியம் எனவும், ஆணைக்குழுவின் ஆணையாளராக தமிழ் பேசக்கூடிய ஒருவரே நியமிக்கப்படவேண்டும் எனவும் ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையில் பரிந்துரைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் ஆணைக்குழுவில் அறிக்கையில் பரிந்துரைக்கப்படுமென அறியமுடிகின்றது.

அத்தோடு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான



சட்ட வரைபொன்று தயாரிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த வரைபில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள், திருத்தியமைக்கப்படவேண்டிய விடயங்கள் என்பன பற்றியும் ஆணைக்குழு பரிந்துரைக்கும் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது. (05)

# யாழ். அச்சுவேலி விவசாயியால் வெங்காயம் நடுகை செய்யும் இயந்திரம் கண்டு பிடிப்பு

வெங்காயச் செய்கையை இலகுவாக்கும் வகையில் வெங்காயம் நடுகை செய்யும் இயந்திரம் ஒன்றை யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உருவாக்கியுள்ளார்.

குறித்த விவசாயி லாண்ட் மாஸ்டர் இயந்திரத்தை பயன்படுத்தி வெங்காயத்தை நடுகை செய்யும் இயந்திரம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் செலவினங்களைக் குறைத்து வெங்காயத்தை நடுகை செய்யும் முறையைக் கண்டுபிடித்துள்ளார்.

இதனூடாக வெங்காயத்தை நடுகை செய்வதற்கு ஏற்படும் செலவீனத்தை பல மடங்கு குறைத்து அதன் ஊடாக பல ஏக்கர் நிலங்களில் வெங்காயத்தை நடுகை செய்து வெற்றி கண்டுள்ளார்.



இதனை அனைவருக்கும் அறிமுகப்படுத்தும் வகையில் முதற்கட்டமாக வடமாகாண விவசாய பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் நேற்று (வெள்ளிக்கிழமை) நடுகை செய்யும் முறை காண்பிக்கப்பட்டது.

குறைத்த நடுகை முறை வெற்றி அளிக்கும் முறையாக விவசாய அமைச்சால் அங்கீகரிக்கப்பட்டால் அதனை அனைவருக்கும் பரிந்துரைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் ஸ்ரீரங்கன் அஞ்சனாதேவி, முன்னாள் விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார் மற்றும் விவசாய அதிகாரிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (05)

# சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் தேத்தாவாடி பகுதியில் சிக்கினர்

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேத்தாவாடி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் வியாழக்கிழமை கொழும்பில் இருந்து வருகை தந்த புவிச்சரிதவியல் சுரங்க பணியக திணைக்கள அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேத்தாவாடி பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களை கொழும்பில் இருந்து வருகை தந்த புவிச்சரிதவியல் சுரங்க பணியக திணைக்கள அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட புவிச்சரிதவியல் சுரங்க பணியக அதிகாரிகளும் இணைந்து பார்வையிட்டனர்.

இதன்போது தேத்தாவாடி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்தமை தெரிய வந்துள்ளது.

இதன்போது குறித்த தேத்தாவடி பகுதியில் அனுமதிப்பத்திரம் உள்ள இடங்களில் அகழப்படும் மண் களஞ்சியப்படுத்தும் இடங்களில், சட்டவிரோதமான முறையில் அகழ்வு செய்யப்பட்ட மண்ணையும் சேர்ந்து களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யப் படுகின்றமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதன் போது குறித்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 10 உழவு இயந்திரங்கள்,3 ஜே.சி.பி. இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இலுப்பைக்கடவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும் இவை அனைத்துக்குமான அனுமதிப்பத்திரங்களை தற்காலிகமாக இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் பாதுகாப்பு பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெற்றுள்ளதை அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ள நிலையில் குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (05)

# பயங்கரவாதிகளாக இனிமேல் குரங்குகளை கருதவேண்டும்

## நிமல் பியதிஸ்ஸ கிண்டல்

பயிர்செய்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் குரங்குகளின் செயற்பாட்டை பயங்கரவாத செயற்பாடாக கருத வேண்டும். நகரம், கிராமம், விளை நிலங்கள் அனைத்தையும் குரங்குகள் பயங்கரவாதிகளை போல் ஆக்கிரமித்துள்ளன.



ஆகவே, குரங்குகளை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவோம் என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிர்க்கட்சியின் உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

குரங்கு, மயில் உட்பட காட்டு விலங்குகளால் விவசாய பயிர்களுக்கு ஏற்படும் சேதம் பாரதூரமான பிரச்சினையாகக் காணப்படுகிறது.

விவசாயத்துறை வீழ்ச்சியடைவதற்கு இந்த காட்டு விலங்குகள் பிரதான பங்கு வகிக்கின்றன.நகரம்,கிராமம், உட்பட ஒட்டுமொத்த விளை நிலங்களையும் குரங்குகள் பயங்கரவாதிகளை போல் ஆக்கிரமித்து நாசம் செய்கின்றன.

பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் குரங்குகள், காட்டு விலங்குகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் போது புலம் பெயர் அமைப்புக்களிடமிருந்து டொலர் பெறும் சுற்றாடல் துறை நிபுணர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரித்துள்ளார்கள். நாட்டில் 70 சதவீதமான விவசாயிகள் உள்ளார்கள்.

குரங்குகளை ஏதாவதொரு வழிமுறையில் கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறார்கள். ஆகவே, டொலருக்காக செயற்படும் சுற்றாடல் நிபுணர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய தேவையில்லை.

கிராமப்புறங்களில் உள்ள தென்னை மரங்கள் உட்பட வீட்டு சுற்றத்தில் உள்ள மரங்களைக் கூட விட்டு வைப்பது இல்லை. கிராமப் புறங்களில் வாழும் மக்கள் இந்த பாரதூர தன்மையை அறிவார்கள். கொழும்பில் குளிர் அறையில் இருந்துக் கொண்டு கருத்து உரைப்பவர்களுக்கு நடைமுறையில் இருக்கும் பிரச்சினை ஏதும் தெரியாது.

ஆகவே, குரங்குகளின் செயற்பாட்டை பயங்கரவாத செயற்பாடாகக் கருதி கடுமையான நடவடிக்கைளை வெகு விரைவில் எடுக்க வேண்டும். இந்த பிரச்சினைக்கு அரசாங்கம் எடுக்கும் தீர்மானங் களுக்கு எதிர்க்கட்சியின் சுயாதீன உறுப்பினர் என்ற அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்குவோம். -என்றார். 05)

# காட்டு விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பை கட்டுப்படுத்த விசேட அதிகாரசபை

## நியமியுங்கள் என்கிறார் நளின் பண்டார



குரங்கு, காட்டு யானை உட்பட காட்டு விலங்குகளால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்த துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் விசேட அதிகார சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். பிரச்சினையின் பாரதூரத் தன்மையை குறிப்பிடும் அரசாங்கம் பிரச்சினைக்குத் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பயிர்களை சேதப்படுத்தும் குரங்குகள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

குரங்கு உட்பட காட்டுவிலங்குகளால் விவசாய பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் அரசாங்கம் அறிக்கை பெறுகிறது. பேச்சுகளில் ஈடுபடுகிறது. ஆனால், இதுவரை நடைமுறைக்கு சாத்தியமான எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

காட்டு விலங்குகளால் விவசாய பயிர்களுக்கு பாரதூரமான பாதிப்பு ஏற்பட்டுள்ளன. கிராம புறங்களில் வீடுகளைக் குரங்குகள் ஆக்கிரமித்துள்ளன.

ஒருசிலருக்கு 30 முதல் 40 வரையான தென்னை மரங்கள் உள்ளன. ஆனால், ஒரு தேங்காய் சம்பல் செய்வதற்கு கூட குரங்குகள் தேங்காய் களை விட்டு வைப்பதில்லை.

சுற்றாடல்துறை நிபுணர்களின் அறிக்கைகளைப் பெற்று, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. ஏனெனில், அவர்கள் சுற்றாடல் மற்றும் காட்டு விலங்குகளின் நலன் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவார்கள்.

ஆகவே, காட்டு விலங்குகளால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் திட்டங்களை செயற்படுத்த துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் அதிகார சபையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். - என்றார். (05)

# வெள்ளவத்தையில் ஆணின் சடலம் மீட்பு

## ரயில் மோதி உயிரிழந்தாராம்

கொழும்பு, வெள்ளவத்தையில் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று வெள்ளவத்தைப் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

கோட்டையில் இருந்து தெஹிவளையை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் அடையாளம் காணப்படவில்லை என்றும், சடலம் களுபோவில வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் வெள்ளவத்தைப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (02)

# குரங்குகளால் விவசாயப் பயிர்களுக்குக் கடும் பாதிப்பு: நிபுணர்களின் யோசனை நடைமுறைச் சாத்தியமன்று!

## விவசாயத்துறை அமைச்சர் தெரிவிப்பு

குரங்குகளால் விவசாய பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை தடுக்க சுற்றாடல்துறை நிபுணர்கள் முன்வைத்துள்ள யோசனைகள் நடைமுறைக்கு சாத்தியமற்றவை. சகல தரப்பினரது ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு சிறந்த தீர்மானத்தை எடுக்க எதிர்பார்த்துள்ளோம் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பயிர்களை சேதப்படுத்தும் குரங்குகள் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

குரங்குகள் உட்பட காட்டு விலங்குகளால் விவசாய பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிலையம் விவசாயத்துறை அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

2022ஆம் ஆண்டுமுதல் ஆறு மாத காலப்பகுதியில் மாத்திரம் 93 மில்லியன் தேங்காய்களை குரங்குகள் நாசம் செய்துள்ளன. அதேபோல் காட்டு விலங்குகளால் மாத்திரம் தெங்கு, பலா உட்பட 200 மில்லியன் உணவுப் பொருள்கள் நாசமடைந்துள்ளன.

விளை நிலங்களை ஆக்கிரமித்துள்ள குரங்கு, காட்டு யானை உட்பட விலங்குகள் மனித குடியிருப்புக்களையும் விட்டுவைக்கவில்லை. கொழும்பு நகரில் உள்ள பூங்காக்களிலும் குரங்குகள் திரிவதை அவதானிக்க முடிகிறது. ஆகவே, காட்டு விலங்குகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

காட்டு விலங்குகளால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்பை இழிவளவாக்குவது தொடர்பில் சுற்றுச்சூழல் நிபுணர்கள் முன்வைத்துள்ள யோசனைகள் நடைமுறைக்கு சாத்தியமற்றவை.

பயிர்ச்செய்கையின்போது விலங்குகளுக்கு என தனித்து பயிர்செய்கையை மேற்கொண்டு அதனை விலங்குகளுக்கு ஒதுக்கிக் கொடுக்குமாறு சுற்றாடல் நிபுணர்கள் முன்வைத்துள்ள யோசனை சாத்தியமற்றதாகும். விலங்குகளுக்கு என விவசாயிகள் தனித்து விவசாயம் செய்ய மாட்டார்கள்.

தென்னை மர ஓலையில் தகரம் கட்டுதல், மரத்தை பொலித்தீன், சீலை ஆகியவற்றால் மூடுதல் என முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் நடைமுறைக்கு சாத்தியமற்றவை. விலங்குகளுக்கு என காடுகளில் மரங்களை வளர்க்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள யோசனை சிறந்தது. இருப்பினும், காடுகளில் பலா, மா மரங்களை நாட்டி, உடனே விளைச்சல் பெற முடியாது. அதற்கு நீண்ட காலம் செல்லும். குரங்குகள், காட்டு யானை உட்பட காட்டு விலங்குகளின் இனப்பெருக்கம் தீவிரமடைந்துள்ளது.

இவ்வாறான பின்னணியில் ஒரு லட்சம் குரங்குகளை வழங்குமாறு சீன நாட்டின் தனியார்



மிருகக்காட்சிசாலையின் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் ஆரம்பகட்ட பேச்சு எடுத்த நிலையில், ஒரு தரப்பினர் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். சீன அரசாங்கம், சீனத் தூதரகம் உட்பட சீனர்களை அவமதிக்கும் வகையில் கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள்.

சீனாவுக்கு குரங்குகளை வழங்கும் பேச்சை ஒரு தரப்பினர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தியுள்ளார்கள். ஆகவே, நீதிமன்றத்தின் தீர்ப்பை தொடர்ந்தே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், காட்டு விலங்குகளினால் விளைநிலங்களுக்கு ஏற்படும் பாதிப்பை ஏதாவதொரு வழிமுறையில் கட்டுப்படுத்த வேண்டும். - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள சுற்றுலாத்துறையின் அதிக பங்களிப்பு தேவை

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள சுற்றுலாத்துறையின் அதிகபட்சபங்களிப்பைபெற்றுக்கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் தனித்துவமான சமையல் கலை உலகம் முழுவதிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ளதுடன், அதனை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தின் அதிகபட்ச ஆதரவு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் ஆரம்பமான 'சமையல் கலை மற்றும் உணவுக் கண்காட்சி 2023' இன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை சமையல் கலைஞர்கள் சங்கம் வருடாந்த சமையல் கலை மற்றும் உணவுக் கண்காட்சியை ஏற்பாடு செய்து வருகிறது, இது இலங்கை முழுவதிலும் உள்ள சமையல் கலைஞர்களின் திறமைகளை வெளிப்படுத்துகிறது.

இவ்வருட கண்காட்சி 88 தயாரிப்பு மற்றும் சேவை நிலையங்களை உள்ளடக்கியிருந்ததுடன், அவைகளை பார்வையிட ஜனாதிபதியும் இணைந்து கொண்டார். கண்காட்சியில் பங்குபற்றிய சமையல் கலைஞர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

இத்துறையின் முன்னேற்றத்துக்காக சமையல் கலை தொடர்பான பாடசாலையொன்றை ஸ்தாபித்தல், சமையல் கலைஞர்களை தரவரிசைப்படுத்துவதற்கான முறைமையை அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு புதிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க -

